
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1136

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

51

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# திரும்பிய பக்கமெல்லாம் பெரியார்... சிலையாகவும் சித்தாந்தமாகவும்!



திருவாரூரில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஊர் திருவாதிரைமங்கலம். 2011-ஆம் ஆண்டு, மக்கள்தொகை கணக்கெடுப்பின்படியே நான்காயிரத்திற்கும் குறைவானோர்தான் அங்கு வசிக்கின்றனர். ஆனால், முக்கால் நூற்றாண்டுக்கு முன்பே, அதில் நூற்றுக்கணக் கானோரை கருப்புச் சட்டைக்காரர்களாக மாற்றிய கிராமம் திருவாதிரைமங்கலம். கிராமத்திற்குள் நுழைந்தாலே பெரியார் சிலைதான் முதலில் எவரையும் வரவேற்கும். அங்கு மட்டுமல்ல, கங்களாஞ்சேரி தொடங்கி நாகூர் வரை சுற்றியுள்ள கிராமங்களில் நான்கைந்து இடங்களில் பெரியார் சிலையாக இருப்பார். பல ஊர்களில் பேருந்து நிறுத்தம் பெயரே பெரியார் சிலைதான். காரணம், பெரியார் சித்தாந்தமாக அவர்களுக்குள் ஊறியிருந்தார். அதனால்தான் இன்றளவிலும் அதன் அடையாளமாக அங்கெல்லாம் சிலையாக உயர்ந்து நிற்கிறார்.

குறிப்பாக, திருவாதிரைமங்கலத்தில் விழா என்றாலே, அது பெரியார் பிறந்த நாளும், தமிழர் திருநாளாம் தைப்பொங்கலும்தான் முக்கிய விழாக்கள். இந்த இரண்டு நாள்களையும் ஒட்டுமொத்த கிராமமும் திருவிழா போல கொண்டாடுகிறது. பெரியார் பிறந்தநாள் என்றால், அவருடைய சிலையை அலங்கரித்து, கொடிகளைக் கட்டி, ஒலிபெருக்கியில் பெரியார் பாடல்களை ஒலிக்கவிட்டு, பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடுகிற வழக்கம் இன்றுவரை அங்கு தொடர்கிறது.

ஊரில் சாதிய சிந்தனைகள் தலைதூக்காத வண்ணம் சமத்துவத்தை நிலைநாட்டியுள்ளனர். மூடநம்பிக்கைகளை பின்பற்றுவதில்லை. மற்ற ஊர்களில் எல்லாம் யாராவது இறந்து விட்டால், பெண்கள் அந்த ஊர் எல்லை வரைதான் சடலத்துடன் வருவார்கள். இறந்தது தங்கள் குடும்பத்தினரே என்றாலும்கூட, பெண்கள் அதற்குமேல் அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஆனால், திருவாதிரைமங்கலத்தில் சடலத்தை சுமந்து செல்வதிலும் பெண்கள் முன்வரிசையில் நிற்பார்கள். ஆண்களும் பெண்களுமாய் மாறி சடலத்தை மட்டும் சுமக்கவில்லை, கூடவே திராவிட இயக்கம் விதைத்த சமத்துவத்தையும் தூக்கிச் சுமக்கிறார்கள். கிராமத்தில் யாரும், யாருக்கும் அடிமை வேலை செய்யக் கூடாது என முக்கால் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே பிரச்சாரம் செய்ததன் விளைவாக, இன்றைக்கு அந்த நிலைமையே இல்லாமல் ஒழிக்கப் பட்டுள்ளது.

இதற்கெல்லாம் விதையாக, அந்த ஊரில் உழைத்தவர்கள் பலர் இருக்கின்றனர். சுப்பிரமணியன், பாலச்சந்திரன், கோவிந்தசாமி, பரந்தாமன், ஞானசேகரன், கணபதி, முருகானந்தம், இராமையன், சீனிவாசன், அம்பேத்கர், செல்வமணி, திராவிடமணி, தங்கவேல், எஸ்.எஸ்.மணியம், முத்தம்மாள், அஞ்சம்மாள், காசியம்மாள், வெள்ளை அம்மாள், பார்வதி, வீரம்மாள், கல்யாணி, சுப்புலட்சுமிபதி எனப் பெரும் படை வரிசையே அந்த உழைப்புக்குப் பின்னால் இருந்திருக்கிறார்கள். இப்போதும் திருவாதிரைமங்கலத்தில் திராவிடர் கழகத்தினர் சுமார் 20 குடும்பத்தினர் உள்ளனர். பலர் படித்துவிட்டு பட்டதாரிகளாக வெளியூருக்கு வேலைக்குச் சென்றுவிட்டனர். கூடவே, திருவாதிரைமங்கலம் கற்பித்த திராவிட இயக்க கொள்கை உணர்வோடு சென்றிருக் கிறார்கள். சென்ற ஊர்களிலும் அதே உணர்வோடு வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

> 1973-இல் பெரியார் மறைந்தபோது, எங்கள் கிராமமே அழுதது. அழாத ஒரே ஆள் நானாகத்தான் இருப்பேன். ஆனால், பின்னாளில் விடுதலை நாளிதழ்களை வாசித்து, பெரியாரின் தீவிர தொண்டராக மாறிப்போனேன்.
>
> -மகேஸ்வரி, திராவிடர் கழகம், திருவாதிரைமங்கலம்.



...பயணம் தொடரும்

## கொடுமைகளை அனுபவித்து வருகிறோம்!

மக்கள் நலன் குறித்து சிறிதும் அக்கறையில்லாத... ஆட்சித்திறன் துளியுமில்லாத பிரதமரைத் தேர்ந்தெடுத்து, இந்தியா கொடுமைகளை அனுபவித்து வருவதாக முகநூலில் எழுதியுள்ளார் பத்திரிகையாளர் தெ.சு.கவுதமன். அவரது பதிவிலிருந்து...

"அந்த 56 இஞ்ச் மனுஷன் ஆட்சிக்கு வந்ததிலிருந்து முதல் பேரழிவாக... டீமானிடைசேஷனில் நாமெல்லோரும் தத்தளித்தோம்... வங்கியின் வாசலில், வெறும் 2000 ரூபாயை நம்முடைய செலவுக்காக எடுப்பதற்கு 10 மணி நேரமாக நிற்போமென்று நினைத்திருப்போமா? திருமணத்தை நிச்சயம் செய்தவர்கள், அதற்கான செலவுக்கு பணத்தை எடுக்க வழியின்றி, பல திருமணங்கள் தடைபட்டதைப் பற்றி கவலைப்பட்டாரா அந்த 56 இஞ்ச்?

அடுத்ததாக ஜி.எஸ்.டி. அறிமுகத்தால் ஏற்பட்ட தொழில் நட்டங்களையும் கடந்து வந்தோம்... லட்சக்கணக்கான சிறுதொழில்முனைவோர்கள் தொழில்களை விட்டுவிட்டு வேலைக்குச் செல்லும் பரிதாபச் சூழல்!

அடுத்ததாக கொரோனா... அதைச் சரியான முறையில் எதிர்கொள்ளாமல்... அறிவியலுக்குப் புறம்பாக விளக்கு பிடித்து... மணியடித்து... பொதுமுடக்கத்தால், லட்சக்கணக்கான வடமாநிலத் தொழிலாளர்கள் சொந்த ஊர்களை நோக்கி, கால்நடையாகவே பலநூறு கிலோமீட்டர்கள் நடந்து... செல்லும் பாதையிலேயே சுருண்டு விழுந்து உயிரிழந்து... ரயில் தண்டவாளத்தில் படுத்துறங்கி... அடிபட்டு உயிரிழந்து... யாருக்குமே உதவாமல் வேடிக்கை பார்த்த 56 இன்ச் மனிதர்!

இதோ இப்போது, அமெரிக்காவுக்கு அடிமையாகி, ட்ரம்ப் ஆட்டிவைக்கும் பொம்மையாக மாறி, போரைத் தொடங்கி வைக்கச் சென்றதுபோல், இவர் இஸ்ரேல் சென்று கட்டிப்பிடித்து போஸ் கொடுத்துவிட்டுத் திரும்பிய ஒரே நாளில் போர் தொடங்கியது! எதிர்பார்த்து பயந்ததுபோலவே எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது! ஹோட்டல்கள் மூடப்படுகின்றன, விடுதிகளில் சாப்பாடு இல்லை. டீக்கடைகள் மூடப்படுகின்றன. முடிவுசெய்யப்பட்ட திருமணங்கள் தடைபடுகின்றன. வட மாநிலத் தொழிலாளர்கள் ஹோட்டல்கள் இல்லாமல் உணவுக்காகத் தவிக்கிறார்கள். வீடுகளிலும் சமைப்பது குறித்து பெருங்குழப்பத்தில் இருக்கிறார்கள்!

ஆட்சித்திறன் துளியுமில்லாத... வெறும் விளம்பரத்தால்... போட்டோஷூட்டால் மட்டுமே தன்னை முன்னிறுத்தி, போலியாக உச்சத்துக்கு ஒரு மனிதரை உயர்த்திவிட்டதன் பலனை... கொடுமைகளை நாம் அனுபவித்துவருகிறோம்!" என்கிறது அந்தப் பதிவு.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

101

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# பா.ஜ.க.வின் பொய்யும் உண்மை நிலவரமும்...

**'தமிழ்நாட்டின் அடிப்படைத் திட்டங்களையெல்லாம் பா.ஜ.க.தான் நிறைவேற்றுவதுபோல, 'ஏழை எளியோரின் நல்லரசாக விளங்கும் மத்திய அரசு' என்று பிரதமர் மோடி படத்துடன் பக்கம் பக்கமாக விளம்பரம் செய்து, தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க. நன்மை செய்வதுபோல காட்டியிருக்கிறார்களே?**

திருச்சி சிறுகனூரில் மார்ச் 9 அன்று, பிரம்மாண்டமாக நடந்த தி.மு.க.வின் தேர்தல் மாநாட்டின் தாக்கம் தமிழ்நாட்டு அரசியலில் வெவ்வேறு விதமான அலைகளை உருவாக்கியிருக்கிறது. பா.ஜ.க.வின் நெருக்கடி அரசியலை பழைய-புதிய கட்சிகள் எதிர்கொண்டு வருகின்றன. இந்த நிலையில், திருச்சிக்கு மார்ச் 11 அன்று, பிரதமர் மோடி வந்ததையொட்டி, ஒன்றிய அரசின் சார்பில் நாளேடுகளில் பக்கம் பக்கமாக விளம்பரங்கள் கொடுக்கப்பட்டன. அதாவது, தமிழ்நாடு உள்ளிட்ட இந்திய மக்களின் வரிப்பணத்தில், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பொதுக்கூட்ட நாளில் அரசின் சார்பில் விளம்பரங்கள் அள்ளி வழங்கப்பட்டுள்ளன. ஒன்றிய பா.ஜ.க. அரசின் திட்டங்களால் தமிழ்நாடு என்னென்ன பயன்களை அடைந்துள்ளது என்பது குறித்து, சில விவரங்களை வெளியிட்டிருக்கிறார்கள்.



பிற மாநிலங்களைவிட சிறப்பாகச் செயல்படுத்தியும்கூட தமிழ்நாட்டுக்குரிய நிதியை ஒதுக்காத ஜல்ஜீவன் (குடிநீர்) திட்டம், கலைஞர் காலத்திலேயே தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சமையல் எரிவாயு (உஜ்வாலா) இணைப்புத் திட்டம் உள்ளிட்ட பலவற்றை அதில் மோடி அரசின் சாதனைகளாகக் குறிப்பிட்டுள்ளனர். இத்தகைய திட்டங்களில் ஒன்றிய அரசின் பங்களிப்பு என்ன, மாநில அரசின் பங்களிப்பு எவ்வளவு, ஒன்றிய அரசு மாநிலத்துக்குத் தர வேண்டிய நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை எப்படியெல்லாம் வஞ்சிக்கிறது என்பதை சட்டமன்றத்திலேயே திராவிட மாடல் அரசின் முதலமைச்சரும் அமைச்சர்களும் புள்ளிவிவரங்களுடன் தெரிவித்திருக்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக, பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (கிராமின்) என்று தமிழ்நாட்டுக்கு சம்பந்தமில்லாத மொழியில் பெயர் வைக்கப்பட்டுள்ள பிரதம மந்திரி கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தில் ஒன்றிய அரசின் பங்கு என்ன, மாநில அரசின் பங்கு என்ன என்பதற்கு, புகைப்பட ஆதாரத்துடன் விவரங்கள் உள்ளன. திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், நகர் ஊராட்சியில் (கிராமத்தின் பெயர் நகர்) கட்டப்பட்டுள்ள ஒரு வீட்டின் மதிப்பு 2,79,300 ரூபாய்.

இதில், தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ள தொகை 1,72,800 ரூபாய். (அதாவது 62%). ஒன்றிய அரசு ஒதுக்கீட்டுத் தொகை 1,06,500 ரூபாய் மட்டுமே. (அதாவது, 38%). கிராமப்புற மக்களுக்கான வீடு கட்டும் திட்டத்தில் மாநில அரசின் பங்கே அதிகமாக உள்ளது. ஆனால், இதற்கு பிரதம மந்திரியை முன்வைத்து பெயர் சூட்டப்பட்டுள்ளது. கிராம மக்களிடம் மிக எளிமையாக 'மோடி வீடு' என்று பா.ஜ.க. பிரச்சாரம் செய்கிறது. மோடி வீடு கட்டுவதற்கே ஸ்டாலின் அரசுதான் அதிகம் பணம் தர வேண்டியுள்ளது என்பதுதான் உண்மை நிலவரம். ஏழை எளியோரின் நல்லரசு எனத் தம்பட்டம் அடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் பெரும்பாலான திட்டங்களின் இலட்சணம் இதுதான்.

...வினா தொடரும்.

## ஃப்ளாஷ்பேக்

### முத்தமிழறிஞரை உணர ஒரு காலசாட்சியம்!



2012-ஆம் ஆண்டு, டிசம்பர் 2 அன்று, திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் 80-வது பிறந்த நாள் விழா, சென்னை, பெரியார் திடலில் 'சுயமரியாதை நாள்' எனக் கொண்டாடப்பட்டது. அன்று நடந்த கவியரங்கில், கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் தலைமையில், நானும் 'சொற்கோ' கருணாநிதி அவர்களும் பங்கேற்றோம். கவியரங்கம் முடிந்து மேடையை விட்டு கீழே இறங்கும் சமயத்தில், ஆசிரியர் அய்யா அவர்கள் வந்து, 'உங்களைத் தலைவர் அழைக்கிறார்' என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் எங்களை அழைத்துச் சென்றார். கலைஞர் அவர்கள், எங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே பாராட்டியதுடன், புகைப்படக் காரரிடம் படம் எடுக்கவும் சொன்னார். முத்தமிழறிஞரின் ஞானத்தை உணர்வதற்கு, இந்தப் படம் ஒரு கால சாட்சியம் என்றே எனக்குத் தோன்றும்.



கவிஞர் தமிழ் அமுதன்

**– கவிஞர் தமிழ் அமுதன், தலைவர், தமிழ்நாடு திரைப்படப் பாடலாசிரியர்கள் சங்கம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### திடீர் கைது!

1948-ஆம் ஆண்டு, ஆகஸ்டில் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி, சென்னை வருவதாக அறிவிப்பு வெளியாகியிருந்தது. அம்மாதம் 22-ஆம் தேதி பெரியாரின் இல்லத்தில் கூடிய திராவிடர் கழகச் செயற்குழு, ராஜாஜிக்கு கருப்புக்கொடி காட்டுவது குறித்து விவாதித்தது. அப்போது, திடீரென்று உள்ளே புகுந்த காவலர்கள் பெரியார், அண்ணா, கே.கே.நீலமேகம், சி.டி.டி. அரசு, ஈ.வெ.கி.சம்பத், கே.ஏ.மதியழகன், என்.வி.நடராசன், ஏ.பி.சனார்த்தனம் ஆகியோரை கைது செய்தனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.